**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial

Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 223/2010 P.W.10/L.W.10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. சாம்சன் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 19.03.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது திருநெல்வேலி மாநகரத்தில் சிறப்பு நுண்ணறிவு பிரிவு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு குளச்சல் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது 01.01.2010 ம்தேதி நிலையத்தில் பதிவுச் செய்த மனு எண் 73/2010 ஐ 12.03.2010, 16.45 மணிக்கு பரிசீலனைச் செய்து மனுவின் தன்மைக்கேற்ப குளச்சல் காவல்நிலையக்குற்ற எண். 85/2010 சட்டப்பிரிவுகள் 147, 323, 294(பி), இ.த.ச 1860 ன் கீழ் வழக்குப்பதிவு செய்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் மனுவை கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை எனது விசாரணைக்காக எடுத்துக்கொண்டேன்.

2. மேற்படி வழக்கு கோப்பைஎனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 12.03.2010 ம் தேதி 12.30 மணிக்கு சாட்சிகள் ஆரோக்கிய மோகன், அனிமோள் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 6 மற்றும் பார்வை மகசர் அ.சா.ஆ.7 ஆகும்.** சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுச் செய்தேன்.

3. பின்னல் சாட்சிகள் அந்தோணி ராஜ், ஜாண் மகேஷ், எட்வின், அருள்ஜோதி மற்றும் புகார்தாரர் ராஜ்குமார் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எனது விசாரணையில் இருந்து சம்பவத்தின் தன்மைப்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன். பின்னர் வழக்குக் கோப்பினை நான் பணி மாறுதலில் சென்றதால் நிலையத்தில் ஒப்படைத்துச் சென்றேன்.

<u>**குறுக்கு விசாரணை**</u> :

1. நான் கூறிய மனு ரசீதினை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட நபர் குளச்சல் ஜேம்ஸ் மருத்துவமனையில் இருந்தார். அதன் பிறகு அவர் மேல்சிகிட்சைகக்காக ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்குச் சென்றது தெரியாது. முதல் விசாரணை மட்டுமே நான் செய்தேன். புகார்தாரருக்கு சம்பவத்தன்றே ஞாபகமறதி ஏற்பட்டுவிட்டது என்பது எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. வாக்குமூலங்களில் அவ்வாறு சொல்லப்படவில்லை. சம்பவத்திற்கு பிறகு 12 நாட்கள் கழித்து தான் அவருக்கு நினைவு வந்து புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

2. காயம்பட்ட நபரை யார் தாக்கினார்கள் என்ற விவரம் எனது விசாரணையில் துலங்கியதா என்றால் கோடிமுனை பேருந்து நிலையத்தில் வைத்து குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தாக்கியதாக சொல்லப்பட்டுள்ளது. சாட்சிகளை நான் எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் 12 ம் தேதி ஊரில் வைத்து விசாரித்தேன். நான் காவல்நிலையத்தில் வைத்து விசாரித்து கையொப்பம் பெற்றேன் என்றால் இல்லை. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவுச் செய்யவில்லை என்றும், சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் எதுவும் பதிவுச் செய்யவில்லை என்றும், நிலையத்தில் வைத்தே வழக்காவணங்களை தயார் செய்து அதன் அடிப்படையிலேயே ஆவணங்களை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.